LIBRARY
07 APR 2009
Eastern University, Sri Lanka

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட கலைமாணித் தேர்வு - 2006/2007 (வெளிவாரி)

(ஏப்ரல்/மே 2009)

# ECO 302 Applied Economics

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. "பூகோளமயமாதல் (Globalization) என்பது இன்றைய உலக நாடுகள் யாவற்றுக்கும் அவசியமானதொன்றெனினும், இதனை நடைமுறைப் படுத்துவதில் மூன்றாம் மண்டல நாடுகள் பல சவால்களை எதிர்கொள்கின்றன."

(அ) இக்கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) உலகமயமாதல் ஏற்படுத்தும் பாதகமான தாக்கங்களில் இருந்து எவ்வாறு மூன்றாம் மண்டல நாடுகள் விடுபட முடியும் என்பது பற்றிய உமது வாதங்கள் எவை?

(10 புள்ளிகள்)

02. (அ) புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் (MDGS) என்பதன் கருத்து யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளுக்கும், மானிட அபிவிருத்தி என்பதற்கும் இடையிலான தொடர்பை ஆராய்க?

(10 புள்ளிகள்)

(இ) புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளைப் பொறுத்தவரை இலங்கை அரசாங்கத்தின் சாதனைகளை மதிப்பிடுக.

(05 புள்ளிகள்)

03. "இலங்கையில் அண்மைக்கால சனத்தொகை வயதுக் கட்டமைப்பானது, ஒரு கட்டமைப்பு ரீதியான மாற்றத்திற்கு உட்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது". ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடையினை ஆதாரங்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

04. (அ) இலங்கையில் உள்நாட்டு விவசாயத்தின் பொதுவான பண்புகளைப் பட்டியலிட்டு அதன் முக்கியத்துவத்தை விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) பெருந்தோட்டத்துறையின் தனியார் மயமாக்கமானது அத்துறையில் ஏற்படுத்திய தாக்கங்களைப் பரிசீலிக்குக.
(10 புள்ளிகள்)

05. (அ) 1977 இற்குப் பின் இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்க.
(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையை கைத்தொழில் மயமாகிவரும் ஒரு பொருளாதாரமென வர்ணிப்பீரா? உமது விடையை விளக்குக?
(10 புள்ளிகள்)

06. (அ) நிலைத்து நிற்கும் அபிவிருத்தி (Sustainable Development) என்ற பதத்தை வரையறை செய்து, அதற்கு அவசியமான நிபந்தனைகளை குறிப்பிடுக?
(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு அவசியமான உத்திகளை வகுப்பதற்கு விஷேட கவனம் செலுத்த வேண்டிய துறைகளையும், செயற்பாடுகளையும் ஆராய்க?
(10 புள்ளிகள்)

07. (அ) சுதந்திரத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் இலங்கைப் பொருளாதாரம் எதிர்நோக்கியிருந்த அடிமட்ட சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு எவ்வகையில் தீர்வாக அமைந்தன என்பதனை மதிப்பிடுக?
(20 புள்ளிகள்)

08. பின்வருவன பற்றி கருத்துரைக்குக.
(அ) ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் கொள்கை
(ஆ) இலங்கையில் வேலையின்மையின் அண்மைக்காலப் போக்கு
(இ) வர்த்தகத் தாராளமயமாக்கத்தினால் எற்படக்கூடிய அனுகூலங்கள்
(ஈ) தற்போதைய உலகப் பொருளாதார மந்தம் இலங்கைப் பொருளாதாரம் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள்.

*******